# பத்திரிக்கைச் செய்தி

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை புதுக்கோட்டை பிரிவு அலுவலகத்தை புகார்தாரர் அணுகி தான் வாங்கிய நிலத்தின் பட்டாவை உட்பிரிவு செய்ய மனு சமர்ப்பித்ததாகவும், அந்த மனுவின் மீது மேல் நடவடிக்கை எடுக்க புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை மண்டல துணை தாசில்தார் திரு.செல்வகணபதி ரூ.4,000/- கையூட்டாக கொடுக்க வேண்டும் எனவும் மேற்படி நிலத்தினை அளப்பதற்கு காந்தர்வகோட்டை சர்வேயர் திரு.முத்து ரூ. 10,000/- கையூட்டாக கொடுக்க வேண்டும் எனவும் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் திரு.ஜெரோம் என்பவருக்கு ரூ.1,000/- கையூட்டாக கொடுக்க வேண்டும் எனவும், மேற்படி பணத்தை திரு.ஜெரோம், கிராம நிர்வாக அலுவலரிடம் கொடுக்குமாறு கூறியதாகவும், தான் லஞ்சம் கொடுக்க விரும்பவில்லை எனவும், நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 02.12.2020 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது மண்டல துணை தாசில்தார் திரு.செல்வகணபதிக்கு கொடுக்க வேண்டிய லஞ்ச பணம் ரூ.4,000/-, காந்தர்வகோட்டை சர்வேயர் திரு.முத்துக்கு கொடுக்க வேண்டிய லஞ்ச பணம் ரூ.10,000/- மற்றும் கிராம நிர்வாக அலுவலர் திரு.ஜெரோமுக்கு கொடுக்க வேண்டிய லஞ்ச பணம் ரூ1,000/- ஆக மொத்தம் ரூ.15,000/- லஞ்ச பணத்தை மேற்படி திரு.ஜெரோம், கிராம நிர்வாக அலுவரிடம் கையூட்டாக கொடுத்தபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையினரால் மூவரும் கைது செய்யப்பட்டார்கள்.

# PRESS NOTE

The complainant approached the Vigilance & Anti – Corruption, Pudukottai Detachment, and gave complaint that he applied for obtaining sub division patta and full field patta for his land for which the Tr.Selvaganapathy, Zonal Deputy Tahsildar Gandarvakottai, Pudukottai District demanded bribe money of Rs.4,000/- Tr.Muthu, Surveyor, Gandarvakottai demanded bribe money of Rs.10,000/- and Tr.Jerome, Village Administrative Officer, Gandarvakottai, Pudukottai District, demanded bribe money of Rs.1,000/- In this connection a case was registered today 02.12.2020 and a trap was organized.

During trap proceedings, Tr.Jerome, Village Administrative Officer, received the total amount of Rs.15,000/- bribe money, Rs.4,000/- for Zonal Deputy Tahsildar, Rs.10,000/- on behalf of Surveyor and Rs.1,000/- for himself. All the three accused were arrested.